


# வறுமையை விரட்டும் போர்!


வெளிச்சம்

■ சின்னப்பிள்ளை
கிராம மேம்பாட்டு களப்பணியாளர்

எல்லாருக்கும் களஞ்சிய வணக்கம்.

இன்னிக்கு ஏதோ பெரிய எழுத்தாளரு கணக்கா என்னோட அனுபவத்தப் பத்தி நா எழுதறேன்னு சொன்னா, இந்த வளர்ச்சியும் உசரமும் சாதாரணமா வந்ததில்லம்மா. நேத்தடிச்ச காத்துல பறந்து போயி கோபுரத்து உச்சியில இன்னிக்கு உக்காந்திருக்க பூ இல்லப்பு இந்த சின்னப்புள்ள.

திக்குத் தெரியாம, தெசை தெரியாம, வாழ்க்கையின்னா என்னான்னு புரியாம, ஒண்ணா மண்ணா ஓடியாந்து விளையாண்ட பருவத்துலதான் கண்ணாலத்தப் பண்ணி வச்சாக, பாவி மக்க. காட்டுக்குள்ள சுள்ளி பொறக்குறதும், வயக்காட்டுல கட்டு சொமக்குறதுந் தான் எங்க விதியா இருந்துச்சு. மாடு, கன்னு மேச்சுக்கிட்டு, அது போடுற சாணியப் பொறுக்கிக்கிட்டு, எருவாட்டி தட்டி, பத்துப் பாத்திரம் தேச்சு, கொத்து வேலைக்குப் போயி, அய்யா... படிக்க வேண்டிய வயசுல வெலா நோக வேல



பார்ப்போம்; பொழுது சாய வீடு வந்து சேருவோம். நாப்பது வருசத்துக்கு முந்தி இதுதான்யா எங்களோட அன்னாடப் பொழப்பு.

சாதி பாத்து பழகுன ஊர்ப் பொம்பளைகளும் பயலுகளும் ஒரு காலத்துல எங்கள ஒதுக்கி வச்சு வேடிக்க பாத்தாங்க. அந்த வேதனையெல்லாம் மறக்க முடியாதுங்கய்யா... ஆனா, இன்னிக்கி எங்க களஞ்சியம் வந்ததுக்குப் பொறவு, நெலமை முழுசா மாறிப் போச்சு. தாயா, புள்ளையா பழகுறதுக்கு எங்க களஞ்சியக் குழு வழி செஞ்சுருக்குன்னு நெனைக்கிறப்போ மனசுக்கு சந்தோசமா இருக்குய்யா.

மருதைக்குப் பக்கத்துல அப்பன் திருப்பதின்னு ஒரு ஊரு. அந்த ஊருலருந்து வயக்காட்டு வழியாப் போனோ முன்னா ஒரு மைல் தூரத்துல இருக்கு பில்லுசேரி. அதுதான் நா வாக்கப்பட்டு போன ஊரு. இப்போ தார் ரோடு போட்டு, பஸ்செல்லாம் வருது. பெரியாத்துக் கால்வாய் மூலமா வர்ற தண்ணிதான் எங்க நெலங்களுக்கு பாசன ஆதாரம். இப்போதைக்கு 200 குடும்பங்க இருக்கு. இந்த ஊருல இருக்குற காலனி வீடு ஒண்ணுலதான் குடியிருக்கேன். விவசாயத்த மட்டுமே நம்பியிருக்கிற கொத்துக் கூலிகள் நெறைஞ்ச ஊருங்கறதனால சுத்துப்பட்டுல இருக்கற எல்லா விவசாய நிலங்களும் எங்களுக்கு அத்துப்படி. ஏக்கர் கணக்குல நெலம் வெச்சிருக்குற பெரிய ஆட்கள் எல்லாம், எங்க ஊரு ஆளுக உழைப்பத்தான் நம்பியிருக்காங்க. எல்லாரும் நேர்மையா, நம்பிக்கையா உழைப்பாக. அதுக்கு உரிய கூலிய, கணக்குப் பாத்து வாங்கத் தெரியாது.

நான் பொறந்த ஊரு கீழக்கள்ளந்திரி. அங்கதான் வளந்தேன். நான் கொழந்தையா இருக்கும்போதே எங்கம்மா செத்துப்போயிருச்சு. என்ன வளத்தது எங்க அக்காதான். நான் அதத்தான் ரொம்ப நாளா அம்மான்னு நெனச்சுட்டுருந்தேன். நா பெரியவளா ஆனதுந்தான், அது எனக்கு அக்காங்கற வெவரமே தெரியும்.

எங்கப்பா பெரியாம்பள (அவரு பேருதேன்) வய வேலைக்குப் போயிட்டு வந்து எங்கிட்டதான் கணக்கு வழக்கையெல்லாம் குடுப்பாரு. ஏன்னா, எங்க அக்காவுக்கு அம்புட்டு கூறு போதாது. நான் சரியா கணக்கெல்லாம் பாப்பேன்னு எங்கப்பா அடிக்கடி சொல்லுவாரு. நாங்க இருந்த காலனிக்குள்ள ரொம்ப வெவரமான புள்ளன்னு எனக்குப் பேரு. இதுனால காலனிக்குள்ள ஏதாவது கொடுக்கல் வாங்கல் பிரச்னையின்னா எங்கிட்டதான் வருவாக. இந்தச் சமயத்துலதான் அம்மா வழி உறவுக்காரரான பெருமாளுக்கு என்னையக் கட்டிக் கொடுத்தாங்க.

ரெண்டு ஆம்பளைப் பயலுகளையும், மூணு பொம்பளைப் புள்ளைகளையும் பெத்தெடுத்தேன். மொத பொம்பளைப்புள்ள பொறந்த கொஞ்ச நாள்லயே இறந்துருச்சு. ரெண்டாவதும் நாலு வயசுல இறந்துபோயிருச்சு. இன்னொரு பொம்பளப்புள்ள ஒன்பதாவது படிக்கும்போது, வவுத்து வலி

**களஞ்சியம் செயல்பட்டுக்கிட்டிருக்கிற கிராமங்கள்ல இப்போ கள்ளச்சாராயம், கந்துவட்டி ஒழிக்கப்பட்டிருக்கு. வீட்டுக்குள்ளாற முடங்கிக் கெடந்த பொம்பளைங்கள்லாம், இப்போ பொது விசயங்கள்ல முன்ன வந்து செயல்படுறாங்க**



வந்து செத்துப்போயிருச்சு. ரெண்டு பயலுகதான் இருக்காங்கெ. அவிங்களுக்கு கண்ணாலம் ஆகி, கொழந்தைக இருக்கு. அதுகளுக்கு நல்ல வேலையில்லாம கூலிக்கு மாரடிச்சு கஷ்டப்படுறாங்கெ.

வயக்காட்டு வேலைக்குப் போற எங்க ஊரு ஆம்பளை பொம்பளைக, நெலத்துக்காரவுககிட்டப் பேசி நியாயமான கூலி வாங்குறதுக்கு என்னைய கொத்துத் தலைவியா இருக்கச் சொல்லிக் கேட்டுக்கிட்டாக. நானும் சரின்னு சொல்லி, கட்அண்ட் ரைட்டா கூலிய வாங்கிக் கொடுத்துக்கிட்டு வந்தேன். இம்மியளவு தப்புக்கும் இடங்கொடுக்காம மக்கள்ட்ட நல்ல பேரு வாங்குனேன்.

இந்த நேரத்துலதான் ஏதோ சங்கம்னு சொல்லிக்கிட்டு செலபேரு எங்க ஊருக்கு வந்து எங்கள பணங்காசு சேமிக்கச் சொன்னாங்க. நானும் அந்த ஆளுங்கள நம்பி என் ஊருப் பொம்பளைகள அதுல சேரச் சொன்னேன். நான் சொன்னதுக்காக எல்லாரும் சேந்தாங்க. ஆனா, கொஞ்ச நாள்ல எங்க பணத்தயெல்லாம் சுருட்டிக்கிட்டு அவங்க ஓடிப்போயிட்டாங்க. அந்த நேரத்துல எங்களுக்கு ஏற்பட்ட வேதனை சொல்லி முடியாதுங்க. ரத்தம் சிந்தி சேத்து வச்ச காச, நோகாம அள்ளிக்கிட்டு ஓடிப்போயிட்டாகளே, இவுக நல்லா இருப்பாகளான்னு வயிறெரிஞ்சு அழுதோம். 'இனி சங்கமும் வேணாம்; ஒரு எழவும் வேணாம்'னு சொல்லி எங்க பாட்டுக்கு செவனேன்னு வேலைகளைச் செஞ்சிகிட்டு இருந்தோம். சாதிச்சண்டை, கூலிச்சண்டைன்னு ஏகப்பட்ட பிரச்னைகள்லாம் நடந்துகிட்டிருந்த நேரத்துலதான் 'களஞ்சியம்'னு ஒன்னச் சொல்லிக்கிட்டு, தானம் அறக்கட்டளையிலருந்து சில பேரு எங்களச் சந்திச்சாங்க.

முன்னாடியே காச இழந்துப்புட்டு நொந்து போயிருந்த எங்களுக்கு இவங்க மேல மொதல்ல நம்பிக்கையே வரல.



அடித்தட்டுப் பொம்பளைக ஒண்ணா சேந்தா இந்தியாவோட நெலைய மாத்திக் காட்ட முடியும்கறத எங்க களஞ்சிய இயக்கம் நிரூபிச்சுக்கிட்டிருக்கு.

வயக்காடு, கிணத்தடி, ஊர் மந்தை, கோயில் இப்படி நாங்க எங்க போனாலும் பின்னாடியே வந்து பேசுவாங்க. ரொம்ப கேவலமால்லாம் அவங்களப் பேசுனோம். ஆனா, அதையெல்லாம் மனசுல வச்சுக்காம எங்ககூட பேசுவாங்க. 'சரி, என்னதான் செய்யுறாங்கன்னு பாப்போமே'ன்னு கேட்டோம். அப்பத்தான் களஞ்சியம்னா என்ன? அதுல எப்படி சேமிக்கறது? எப்படிக் கடன் எடுக்கறது? இதையெல்லாம் சொன்னதோட, 'ஒங்க பணத்தை நீங்கதான் கையாளணும். நாங்க அதத் தொடக்கூட மாட்டோம்'னு சொன்னதுக்குப் பொறவுதான் எங்களுக்கு முழுசா நம்பிக்க வந்துச்சு. அது மட்டுமில்லாம இது ரொம்ப வித்தியாசமானதுன்னும் உணர்ந்தோம். எங்க காலனிப் பொம்பளைகளும், ஊர்ப் பொம்பளைகளும் சேர்ந்து மூணு களஞ்சியக் குழுக்கள உருவாக்குனோம். அதுல நான் இருந்த குழுவோட பேரு பில்லுக் களஞ்சியம்.

பதினைஞ்சு வருசத்துக்கு முந்தி முளைக்கத் தொடங்கிய எங்க களஞ்சிய வித்து, இன்னிக்கு ஆலமரமா வளர்ந்து இந்தியா முழுக்க ஒன்பது மாநிலங்கள்ல விரிவடைஞ்சுருக்கு. நாலு லட்சம் அடித்தட்டுப் பெண்கள் இதுல உறுப்பினரா இருக்காங்க. ஏறக்குறைய 80 கோடி ரூபாய்க்கு மேல எங்களோட சேமிப்பும், 150 கோடிக்கும் மேல வங்கிக் கடன் தொகையும் இருக்கு. வறுமைக்கோட்டுக்குக் கீழ வாழற எங்க மக்களோட சேமிப்பு, இப்போ இந்தியப் பொருளாதாரத்துக்கு கொஞ்சமாச்சும் பங்களிச்சுருக்குன்னு சொன்னா, அதுக்காக நாங்க உண்மையிலேயே பெருமைப்படறோமய்யா...

ரெண்டு வேள சாப்பிட்டுகிட்டு இருந்த ஏழைக, இன்னிக்கி மூணு வேள சாப்புடுற நெலம ஏற்பட்டதே பெரிய சாதனைதானய்யா. ஆனா, அதையும் தாண்டி சொந்தமா தொழில் செய்யுறதும், வீடு கட்டறதும், நெலம் வாங்குறதும், புள்ளைகளப் படிக்க வைக்கிறதும், அதுகளுக்கு கண்ணாலம் காச்சின்னு பண்ணி வைக்கிறதும் எங்க களஞ்சியங்களால சாத்தியமாயிருக்கு. அடித்தட்டுப் பொம்பளைக ஒண்ணாச் சேந்தா இந்தியாவோட நெலைய மாத்திக் காட்ட முடியும்கறத எங்க களஞ்சிய இயக்கம் நிரூபிச்சுக்கிட்டிருக்கு.

எல்லாரும் நெனக்கிற மாதிரி களஞ்சியங்கறது வெறும் பணங்காசு சேமிக்கற வங்கி நிறுவனம் மட்டுமில்ல. அதையும் தாண்டி சமூக மாற்றத்துலயும் பெரிய அளவுல பங்களிச்சுருக்கு. களஞ்சியம் செயல்பட்டுக்கிட்டிருக்கிற கிராமங்கள்ல கள்ளச்சாராயம், கந்துவட்டி ஒழிக்கப்பட்டிருக்கு. வீட்டுக்குள்ளாற முடங்கிக் கெடந்த பொம்பளைங்கள்லாம், இப்போ பொது விசயங்கள்ல முன்ன வந்து செயல்படுறாங்க. வங்கின்னா என்னான்னு தெரியாமக் கிடந்தவுங்க, வங்கி மேலாளர்கிட்ட உரிமையா கடன் கேக்குறாங்க. கலெக்டர், தாசில்தார், பிடிஓன்னு பல அதிகாரிகள நேருக்கு நேரா சந்திக்கிற துணிச்சல் அவங்களுக்கு வந்திருக்கு.

இந்திய அளவுல 69 பேரு களஞ்சிய இயக்கத்துக்கு தலைவியா இருக்காங்க. அதுல ஒருத்திதான் நானும். நம்மளோட முன்னாள் பிரதமர் வாஜ்பாய் எனக்குக் கொடுத்த விருதுனாலதான் நான் இந்தளவுக்கு வெளிய வந்திருக்கேன். இது ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதந்தான். ஆனா, வெளியில வரவேண்டிய தலைவிகள் ஏகப்பட்ட பேரு இருக்காங்க. அவங்க செஞ்ச பல நல்ல விசயங்கள் வெளியே தெரியணும்.

களஞ்சியம்கற மக்கள் நிறுவனத்த மட்டுமில்லாம, அதப்போல வயலகம், தகவலகம், பஞ்சாயத்து போன்ற பல மக்கள் அமைப்புகள உருவாக்கி, ஏழை மக்களோட மேம்பாட்டுக்காக உழைக்கிற தானம் அறக்கட்டளைதாங்கய்யா எங்களோட தாய் நிறுவனம். நாங்க இணைஞ்சு செய்யுற ஒவ்வொரு செயல் திட்டங்களும் நாட்டோட நிலைமைய உயர்த்துறதையும், வறுமையே இல்லாமச் செய்யுறதையும்தான் லட்சியமா வச்சிருக்கோம். வெள்ளையன வெளியேத்துறதுக்காக நடந்த விடுதலைப் போருக்கு சமமா, வறுமைய நம்ம நாட்டுலருந்து ஒழிக்கறதுக்கு நாங்க நடத்துற போராட்டத்துல நீங்களும் கை கோக்கணும். அதுதான் என்னோட வேண்டுகோள்.

தொகுப்பு: வெ.நீலகண்டன்
படங்கள்: பாலா